1992 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் எந்தெந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தகுதியற்றவர்கள் வெவ்வேறு சங்கத்திலே சேர்ந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ரொட்டி தயாரிக்கின்ற தொழிற்சங்கத்தில் வழக்கறிஞராக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேலூரிலேயே உறுப்பினராகச் சேர்ந்தார் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இப்போது நீக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் கொண்டுவருவது இன்னின்ன இலக்கணங்களைக் கொண்டவர்கள்தான் அதிலே உறுப்பினராக முடியும் என்றுதான் கொண்டுவர முடியும். ஆகவே அமைச்சர் இப்போதே ஒரு அரசு ஆணை பிறப்பித்து அந்தப் போலி உறுப்பினர்களை உடனடியாக நீக்குவதற்கு உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிரின்சிபல் அப்ஜெக்ட்டிவ் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட பிரின்சிபல் அப்ஜெக்டிவுக்கு ஒத்துவராத உறுப்பினர்கள் அல்லது எதிராக இருக்கின்ற உறுப்பினர்களைச் சேர்க்கக்கூடாது என்பதுதான் விதி. அதற்காகத்தான் இப்போது சட்டத்திருத்தமே கொண்டுவர இருக்கிறோம். அதை அரசாங்க உத்தரவின் மூலம் செய்ய முடியாது. சட்டத் திருத்தத்தின் மூலம் செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 428. திரு. கு. சிவசுப்பிரமணியன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

428—

கடலூர் தொழிலாளர் நல நீதிமன்றத்திற்குக் கட்டிட வசதி.

*4574—திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடலூரில் இயங்கும் தொழிலாளர் நல நீதிமன்றம் கட்டிட வசதி இல்லாத காரணத்தால் சரிவர இயங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நிரந்தரமாகச் செயல்பட இடம் தெரிவு செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கடலூருக்கான தொழிலாளர் நிதிமன்றம் தற்போது சென்னையில்தான் இயங்கி வருகிறது. கடலூரில் தொழிலாளர் நீதிமன்றம் இயங்க வாடகைக் கட்டிடம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே விரைவில் தொழிலாளர் நீதிமன்றம் கடலூரில் இயங்க உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல நீதி மன்றம் நமது புரட்சித் தலைவர் காலத்திலே திட்டம் அமைக்கப்பட்டு 23-2-1990-ல் அதற்கான அரசு ஆணை வழங்கப்பட்டது. அதைக் கடந்த கால தி. மு. க. ஆட்சியில் கிடப்பில் போட்டுவிட்டனர். தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க தென்னாற்காடு மாவட்டம், கடலூர் உள்ளிட்ட மீதி நாலு மாவட்டங்கள் சேர்த்து ஆணை வழங்கப்பட்டது. அதற்கான இடத்தை வாடகைக்கு இடம் பிடித்து கடலூரில் இருக்கின்ற தொழிலாளர் நீதி மன்றம் மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே இருக்கின்ற...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி இல்லையென்றால் உட்காரலாம்.

திரு. கு. சிவசுப்பிரமணியன் : உயர்நீதிமன்றப் பதிவாளர் அவர்கள் மற்ற நாலு இடங்களையும் சேர்த்து புரோபோசல்ஸ் வந்தால்தான் இந்த நீதிமன்றம் இயங்க அனுமதிக்க முடியும் என்று சொல்கிறார்கள். இது விசித்திரமாக இருக்கிறது. ஆகவே நாங்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்ற வாடகை இடத்தில் அமைக்க நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றத்தோடு கலந்து பேசி அதனை இயக்க அனுமதிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, கடலூருக்கான தொழிலாளர் நீதிமன்றம் செயல்பட கடலூர் மரியசூசை நகர் கதவு இலக்கம் எண். 48-ல் உள்ள கட்டிடம் தொழிலாளர் நீதிமன்றம் செயல்படுவதற்காக வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தக் கட்டிடத்தை நீதிமன்றத்திற்காக எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகள் முடிந்த பின்னர் நீதிமன்றம் கடலூரில் செயல்படத் துவங்கும். அதை விரைவில் எடுத்துக்கொள்ள அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 1]

முற்பகல் 10-20.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 429, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

429—

கிணற்றுக்குள் ஆழ்துளை அமைக்க மானியத்துடன் கூடிய கடன்

*4631—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் NABARD மற்றும் தேசியமயமான வங்கிகள் மூலம் கிணற்றுக்குள் ஆழ்துளை அமைக்க மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில் நபார்டு மற்றும் தேசியமயமான வங்கிகள் மூலம் கிணற்றுக்குள் ஆழ்துளை அமைக்க மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது மிகவும் வறட்சியான மாவட்டம். தொடர்ந்து கடந்த 10 ஆண்டுக் காலமாக மழை இல்லாமல், நிரந்தரமான பாசன வசதி இல்லாமல் அந்த விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். கிணற்றுப் பாசனத்தை நம்பி வாழ்ந்துகொண்டு இருக்கிற அந்த சிறு, குறு, ஏழை விவசாயிகள் ஓப்பன் வெல் என்று சொல்லப்படுகின்ற திறந்தவெளிச் கிணறுகளை நம்பி அதிலே தண்ணீர் இல்லாமல் அவர்கள் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.